## எக்காரணம் கொண்டும் தமிழ்நாட்டின்

# உரிமைகளை விட்டுக்கொடுக்காத ஆட்சி; ‘திராவிட மாடல்’ ஆட்சி!

## ‘தமிழ்நாடு தலைகுனியாது’ பரப்புரையில் உறுதி!










சட்டப்பேரவைத் தேர்தலை எதிர்கொள்ளும் வகையில் தி.மு.க. சார்பில் தமிழ்நாடு முழுக்க அனைத்து சட்டமன்றத் தொகுதிகளிலும் தமிழ்நாடு தலைகுனியாது பார்ப்புரையானது நடைபெற்று வருகிறது.

பரப்புரை தொடங்கிய 23 நாட்களில் இதுவரை 161 தொகுதிகளில் வெற்றிகரமாக நடைபெற்று முடிந்துள்ளது. 23.02.26 அன்று 9 சட்டமன்றத் தொகுதிகளில் பரப்புரைக் கூட்டங்கள் நடைபெற்றன.

வீரபாண்டியில் சி.வி.எழிலரசன் , பெரம்பூரில் கலாநிதி வீராசாமி, சோழிங்கநல்லூரில் ஜெகத்ரட்சகன், குடியாத்தத்தில் கம்பம் செல்வேந்திரன், கலசப்பாக்கத்தில் எழிலன் நாகநாதன், சேந்தமங்கலத்தில் தயாநிதி மாறன், வாணியம்பாடியில் ஆர்.எஸ். பாரதி, பொள்ளாச்சியில் கார்த்திகேய சிவசேனாபதி, அம்பாசமுத்திரத்தில் மனோஜ் பாண்டியன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர்.

பொள்ளாச்சியில் பேசிய கார்த்திகேய சிவசேனாபதி, “இன்று ‘எம்.ஜி.ஆர். ஆட்சி, ஜெயலலிதா ஆட்சி’ தருவதாக சொல்லிக் கொண்டிருக்கும் எடப்பாடி பழனிசாமியின் ஆட்சிக்காலத்தில் தமிழ்நாட்டு மக்கள் பட்ட கஷ்டங்கள் ஏராளம் என சொல்லி கடந்த அ.தி.மு.க. ஆட்சியின் அவலங்களைப் பட்டியலிட்டவர், அப்படிப்பட்ட மோசமான நிர்வாகம் ஒருபக்கம், கொரோனா பெருந்தொற்று மறுபக்கம் என்ற சூழலில் ஆட்சிக்கு வந்த முதலமைச்சர் அவர்கள் வீழ்ச்சியில் இருந்த தமிழ்நாட்டை மீட்டெடுத்துள்ளார் என எடுத்துரைத்தார். அதோடு ‘திராவிட மாடல்’ ஆட்சியினால்தான், இந்தியாவிலேயே தமிழ்நாடு 11.19% என்ற உச்சபட்ச வளர்ச்சி அடைந்து சாதனை படைத்துள்ளது.’ என குறிப்பிட்டார் “ நமது பிள்ளைகளின் கல்வியும், மாநிலத்தின் பொருளாதாரமும் இன்னும் வளர வேண்டும் என்றால், ‘திராவிட மாடல்’ ஆட்சி தொடர வேண்டும். தமிழ்நாட்டின் உரிமைகளை எவரிடமும் விட்டுக் கொடுக்காத இந்த அரசை, 2026 ல் மீண்டும் அரியணையில் ஏற்ற வேண்டும்” என கேட்டுக்கொண்டர்.

எழிலன் நாகநாதன் பேசுகையில் “இந்த 5 ஆண்டுகளில் மட்டும் 100 மேம்பாலங்களைக் கட்டி முடித்துள் ளோம். கல்வி, விவசாயம், மருத்துவம் என அனைத்துத் துறைகளிலும் இன்று தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளது. ஒரு காலத்தில் பெண்கள் எங்காவது செல்ல வேண்டுமென்றால் கணவரிடமோ, மற்றவர்களிடமோ பேருந்து செலவுக்குப் பணம் கேட்கும் நிலை இருந்தது. அந்த நிலையை மாற்றி, இன்று பெண்கள் யாரிடமும் கையேந்தாமல் தங்கள் தேவைகளைத் தாங்களே பூர்த்தி செய்துகொள்ளும் தன்னம்பிக்கையை இந்த அரசு தந்துள்ளது. அதோடு இந்தியாவிலேயே விவசாயிகளுக்காகத் தனி பட்ஜெட் தாக்கல் செய்த ஒரே அரசும் நமது திராவிட மாடல் அரசுதான்.” என பெருமிதத்தோடு தெரிவித்தார்.

தயாநிதி மாறன் அவர்கள் பேசுகையில் “கடந்த அ.தி.மு.க. ஆட்சி தமிழ்நாட்டின் உரிமைகளை அடமானம் வைத்த ஆட்சியாக இருந்தது, ஆனால் தற்போது எக்காரணம் கொண்டும் தமிழ்நாட்டின் உரிமைகளை விட்டுக்கொடுக்காத ஆட்சியாக திராவிட மாடல் ஆட்சி உள்ளது” என தெரிவித்தார். மேலும் பேசிய அவர் “பெண்களின் வங்கி கணக்கில் ரூ.5,000 நேரடியாக வரவு வைக்கப்பட்டது சமூக நீதி சார்ந்த முக்கிய நடவடிக்கை எனவும் பெண்கள் முன்னேற்றத்தின் மிக முக்கிய அம்சம் இது” எனவும் குறிப்பிட்டார்.

ஜெகத்ரட்சகன் அவர்கள் “தமிழநாட்டில் அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்ற சட்டத்தை கொண்டு வந்து சமூக நீதியை நிலை நாட்டியவர் நமது முதலமைச்சர் அவர்கள் எனவும், காலை உணவுத் திட்டம், தூய்மை பணியாளர்களுக்கு இலவச உணவு வழங்குதல் போன்ற நலத்திட்டங்களின் பயன் பற்றி எடுத்துரைத்தார். “தாய் தந்தையை இழந்த குழந்தைகளுக்கு 2000 ரூபாய் வழங்கும் திட்டதை பற்றி மனமார புகழ்ந்து பேசினார். காலனி என்ற சொல்லின் மூலம் இன்னும் சாதிய அவமதிப்பு இருக்க கூடாது என்பதற்காக, காலனி என்ற பெயரை நீக்கும் சட்டத்தை கொண்டு வந்து சமூக நீதி காத்த அரசாக திராவிட மாடல் அரசு திகழ்கிறது என பேசினார்.

அனைத்து இடங்களிலும் பெண்களும், இளைஞர்களும் திரண்டு வந்து ஆதவரளித்தனர்.

## சட்டமன்றத் தேர்தல் :

# 6 வது நாளாக தி.மு.க. விருப்ப மனு விநியோகம்!

## சென்னை – அண்ணா அறிவாலயத்தில் ஏராளமான கழகத்தினர் திரண்டனர்!




சென்னை, பிப். 26-

சட்டப் பேரவைத் தேர்தலில் தி.மு.க. சார்பில் போட்டியிடுபவர்களுக்கான விருப்ப மனு விநியோகம் சென்னை அண்ணா அறிவாலயத்தில் 20.2.2026 அன்று தொடங்கியது.

6வது நாளாக நேற்று (25.2.2026) கழக நிர்வாகிகள், தொண்டர்கள் என ஏராளமானோர் ஆர்வமுடன் விருப்ப மனுக்களைப் பெற்றனர்.

தமிழ்நாடு சட்டப்பேரவை தேர்தல் ஏப்ரல் மாதத்தில் நடைபெற உள்ளது. இந்த தேர்தலில் தி.மு.க. தலைமையில் மெகா கூட்டணி அமைக்கப்பட்டுள்ளது. இந்த கூட்டணியில் புதிதாக தே.மு.தி.க. இடம் பெற்றுள்ளது. தொடர்ந்து கூட்டணி கட்சிகளுடன் தி.மு.க. தொகுதிப் பங்கீடு குறித்து அதிகாரப் பூர்வ பேச்சுவார்த்தையை தொடங்கி உள்ளது.

இந்த நிலையில் தி.மு.க. சார்பில் போட்டியிட விரும்புகிறவர்களிடம் இருந்து விருப்ப மனுக்கள் விநியோகம் சென்னை அண்ணா அறிவாலயத்தில் கடந்த (20ஆம் தேதி) அன்று தொடங்கியது.

6வது நாளாக நேற்று (25.02.2026) அண்ணா அறிவாலயத்தில் விருப்ப மனுக்களை கழக செய்தித் தொடர்புத் தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், தலைமை நிலையச் செயலாளர்கள் துறைமுகம் காஜா, பூச்சி முருகன், அண்ணா அறிவாலாயம் மேலாளர் பத்மநாபன் ஆகியோர் பெற்றனர். அப்போது கழகத்தினர் ஏராளமானோர் விருப்ப மனுக்களை அளித்தனர்.

தற்போது விருப்ப மனுக்களைப் பொறுத்த வரையில் 234 தொகுதிகளுக்கும் பெறப்படுகிறது.

இதே போன்று, தமிழ்நாடு முழுவதும் பல்வேறு பகுதிகளில் இருந்தும் ஏராளமான தி.மு.க. நிர்வாகிகள், தொண்டர்கள் திரளாக வந்து திரண்டு விருப்ப மனுக்களை வாங்கிச் செல்கின்றனர். ஏராளமானோர் பூர்த்தி செய்த விருப்ப மனுக்களையும் தாக்கல் செய்தனர். விருப்ப மனு விநியோகம் வருகிற மார்ச் 2ஆம் தேதி வரை நடைபெறுகிறது.